DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 672/2022

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகரத்தினம் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.சுப்பிரமணியம் | Calling | : |
| Village | : கிணத்துக்கடவு | Religion | : |
| Taluk | : | Age | : 69 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை :

1. நான் தற்போது கிணத்துக்கடவில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலைக்கு சென்றுகொண்டிருந்தேன். தற்போது வீட்டில்தான் இருந்து வருகிறேன். கடந்த 22.01.2022 அன்று மதியம் சுமார் 01.30, 01.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது என்னுடைய உறவினர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது மகன் ஆனந்த் என்பவருக்கு கிணத்துக்கடவில்லை இருந்து கொண்டாம்பட்டி செல்லும் சாலையில் ராமராஜ் மர மில் எதிரே விபத்து ஏற்பட்டுவிட்டதாக தகவல் கொடுத்தார்.

2. மீண்டும் எனக்கு போன் செய்து எனது மகனை சிகிக்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிக்சைக்காக எடுத்துச்சென்றிருப்பதாக தெரிவித்தார்கள். கோவை மருத்துவமனைக்கு சென்று நான் பார்த்தபோது மருத்துவர்கள் வரும் வழியிலேயே என் மகன் இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள்.

3. எப்படி விபத்து ஏற்பட்டதென்று நான்விசாரித்தபோது 1161 என்ற எண் கொண்ட ஸ்விப்ட் கார் ஏற்கனவே ஒரு நாய் ஒன்றை வாகனத்தில் மோதிவிட்டு அந்த பதட்டத்தில் வேகமாக ஓட்டி வந்ததாகவும் அப்போது என் மகன் சென்ற 6912 என்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார்கள்.

4. நான் கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்த புகார். (புகார் **அசாஆ 1** ஆவணமாமக குறியீடு செய்யப்படுகிறது). இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

5. விபத்தை பற்றி எனக்கு நேடியாக எதுவும் தெரியாது என்றும் என்னுடைய உறவினர் கூறியதின் பேரில்தான் நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படுகின்ற மாலை தவிர வேறு எந்த தேதியிலும் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எந்த இடத்தில் நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும் என்னுடைய உறவினர் கூறியதை வைத்துதான் நான் சம்பவத்தை பற்றி கூறுகிறேன் என்றால் சரிதான்.

6. நான் முதல் சாட்சியத்தில் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் என்னுடைய மகனை மருத்துவமனைக்கு சிகிக்சைக்காக கொண்டு செல்லப்பட்டது பொய் என்றும் எதிரி தன்னுடைய காரில் என்னுடைய மகனை சிகிக்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.